# இயற்கைவள உர தயாரிப்பில் மெட்ரிக்ஸ் நிறுவனம்




நிகழ்ச்சியில் கலந்துகொண்ட மெட்ரிக்ஸ் நிறுவனத்தின் நிர்வாகத்தினர், ஆசிரியர்கள், மாணவர்கள், பண்டார் ஸ்ரீ செண்டாயான் குடியிருப்புச் சங்கத்தினர்.

**க.கலை**

சிரம்பான், அக். 18- மலேசிய நாட்டில் நாள் ஒன்றுக்கு 3 ஆயிரம் டன் மிதமிஞ்சிய உணவுகள் குப்பைத் தொட்டிகளுக்குச் செல்கின்றன. அதே சமயத்தில் உலகளாவிய நிலையில் 1.3 மில்லியன் டன் மிதமிஞ்சிய உணவுகள் வெளியேற்றப்படுவதாக ஜனநாயக சபை கூறியதாக மெட்ரிக்ஸ் கொன்செப்ட் நிறுவனத்தின் செயல்முறை அதிகாரி கார்மேன் லூ கூறினார்.

இங்கு ஸ்ரீ செண்டாயான் டி அம்பாங் ரிசோர்ட்டில் மெட்ரிக்ஸ் செண்டிரியான் பெர்ஹாட் நிறுவன ஏற்பாட்டில் குடியிருப்புப் பகுதிகளில் வெளியேற்றப்படும் மிதமிஞ்சிய உணவுகள் மறுசுழற்சி திட்டத்தைத் தொடக்கி வைத்து உரையாற்றினார்.

உலக முழுவதும் சுமார் 1.3 பில்லியன் டன் எடைகொண்ட மிதமிஞ்சிய உணவுகளை மறுசுழற்சி மூலம் இயற்கை உரமாக விவசாயத்திற்கு மாற்றியமைக்க ஜனநாயக மன்றம் உலக நாடுகளுக்கு வலியுறுத்தி வருகிறது.

அதற்கு ஏற்ற வகையில் மெட்ரிக்ஸ் பெர்ஹாட் நிறுவனம் மலேசியாவில் குப்பைகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள எஸ்டபிள்யு எம் கார்ப்பரேஷன் இணைந்து இந்த மறுசுழற்சித் திட்டத்தினை மெட்ரிக்ஸ் நிறுவனத்தின் மூலம் மேற்கொண்டு வருவதாக மத்திய அவர் மேலும் தெரிவித்தார்.

ஆகஸ்டு மாதம் இத்திட்டம் முதல் முறையாக ஆரம்பிக்கப்பட்டபோது 1956 கிலோ கிராம் மிதமிஞ்சிய உணவுகள் மூலம் 523 கிலோ கிராம் இயற்கை உரம் எடுக்கப்பட்டதாக அவர் கூறினார்.

மிதமிஞ்சி உணவுகள் குப்பைத்தொட்டிகளில் கொட்டி வீணாடிப்பதைவிட விவசாயத்திற்குத் தேவையான இயற்கை உரம் தயாரிப்பதில் முனைப்புக் காட்டி வருகிறது. பெட்ரோன் எண்ணெய் நிலையம், M.Z பூந்தோட்ட நில வடிவமைப்பு நிறுவனத்தின் மூலம் பொதுமக்களின் பயனீட்டுக்காக 1 கிலோ இயற்கை உரம் 8 ரிங்கிட்டிற்கு விற்பனை செய்யப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.



குழுத் தலைவர் டாக்டர் சேக் சோவ், மெட்ரிக்ஸ் நிறுவனத்தின் செயல்முறை அதிகாரி கார்மேன்ட் லூ உட்பட நிகழ்ச்சியில் கலந்துகொண்டோர்.




விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும் இயற்கை உரம்

சிரம்பான் மெட்ரிக்ஸ் பெர்ஹாட் நிறுவனத்தின் கட்டுப்பாட்டில் நிர்மாணிக்கப்பட்டுள்ள குடியிருப்புப் பகுதிகளில் வெளியேற்றப்படும் மிதமிஞ்சிய உணவுகள் மறுசூழற்சி மூலம் இயற்கைத் தரமிக்க உரமாகச் செயல்படுத்தும் முன்னோடி திட்டமாகவும் இது அமைந்துள்ளதாக கார்மேன் லூ கூறினார்.

இந்த வட்டாரத்தில் உள்ள 20 ஆயிரத்திற்கு மேற்பட்ட மரங்கள், பூச்செடிகளுக்கு எம் 2 திட்டத்தின் கீழ் இந்த உரம் பயன்படுத்தப்பட்டு வருவதாக அவர் சுட்டிக் காட்டினார்.